அரசாங்க நிருவாகச்
சுற்றறிக்கை இல: 03/97

எனது இல: 111/163/5/2/எல்/எல்-11/

அரசாங்க நிருவாகச், உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக்கைத்தொழில், பாராளு
மன்ற அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
1997.01..10.ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## தாபன விதிக்கோவையின் அத்தியாயம் X11இன் பிரிவு 11க்கான திருத்தங்கள்

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் X11இன் பிரிவு 11ஐ திருத்தி வெளியிடப்பட்ட 1987 மே மாதம் 06ம் திகதி 367ம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் அதன் உப பிரிவுகளான 11:1, 11:2, 11:3 இத்தால் திருத்தப்படுகிறது.

11.1. தாபன விதிக்கோவையின் X11ம் அத்தியாயத்தின் 8ம் பிரிவின் கீழ் ஓய்வு விடுமுறைகளை பெறுவதற்கு தகைமையுடைய அரச உத்தியோகத்தர் ஒருவருக்கும் 26ம் பிரிவின் கீழ் விடுமுறை வழங்கப்படும் கனிஷ்ட ஊழியரொருவருக்கும் அவர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் அவர் சேமித்துவைத்திருந்த ஏதேனும் முன்னைய ஈராண்டின் மிகுதியாகவிருக்கும் ஓய்வு/சுகயீன விடுமுறைகளை ஓய்வுக்கு முற்பட்ட விடுமுறையாக அவருக்கு வழங்க முடியும்.

11:2. இந்த ஓய்வுக்கு முற்பட்ட விடுமுறைக்குப் பதிலாக நடப்பாண்டுக்காக அவருக்கு உரித்துடைய ஓய்வு/சுகயீன விடுமுறைகளையும் வழங்க முடியும்.

11:3. தாபன விதிக்கோவையின் X11ம் அத்தியாயத்தின் 27ம் பிரிவின் கீழ் விடுமுறை வழங்கப்படுவரும் நாட்சம்பள அடிப்படையில் இருப்பவருமான அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஓய்வு பெறும் ஆண்டிற்காகவும் அதற்கு முற்பட்ட ஆண்டிற்காகவும் மேற்படி பிரிவுகளின் கீழ் மிகுதியாகவுள்ள சுகயீன விடுமுறைகளை ஓய்வுக்கு முற்பட்ட விடுமுறையாக வழங்க முடியும். அவர்கள் ஓய்வுபெறுகின்ற ஆண்டில் வேலை செய்திருப்பின், அவ்வாண்டுக்காக மிகுதியாகவுள்ள எல்லா அமய விடுமுறைகளையும் மேற்குறிப்பிட்டுள்ள விடுமுறைகளுக்கு மேலதிகமாக அவருக்கு வழங்கலாம்.

ஒப்பம்/ ஆர்.எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக்கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.